கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கொறடாச்சேரி ஒன்றியத்திலே பாக்கம் என்ற ஊரில் வெள்ளம் புகுந்து ஆள் உயரத்திற்கு மேல் தண்ணீர் போய்க்கொண்டிருக்கின்றது. அங்கே நல்ல தடுப்புச் சுவர் கட்டவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன. மேலும் நாகப்பட்டினத்திலே எப்படி புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டிக்கொடுக்கிறோமோ அதுபோல் தஞ்சை மாவட்டத்திலே வெள்ளம் வரக்கூடிய இடங்களிலே நிரந்தரமாக வெள்ளப் பாதுகாப்பு இல்லங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். அடுத்து திருமலைராஜன் ஆற்றை அகலப்படுத்த வேண்டும். நண்டலாறு வலது கரையில் தமிழ்நாடு எல்லை வரை ஜீப் போக ஏற்பாடு செய்ய வேண்டும். குடவாசல் தாலுகா எண்கண் கீழ் ஆதிதிராவிட தெருவையும்—நன்னிலம் தாலுகா வாலாமங்கலத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16-2-84 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

(69) மதுரை மாவட்டம், நத்தம் வட்டத்தை சேர்ந்த பரலி கிராமத்தினை தானமாக கொடுக்கப்பட்ட கிராமமாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 6-6-1981 ஆம் நாளிட்ட 1065 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(70) (தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 26-10-1983 ஆம் நாளிட்ட 2258 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் IV/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(71) கரம்பக்குடி பஞ்சாயத்து யூனியனுக்கு சொந்தமான சில வண்டிகளுக்கு 1-4-1974 முதல் 30-6-1975 வரைக்கான காலத்திற்கு செலுத்தக் கூடிய ரூ. 1250 அபராதத் தொகை குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 9.11.1983 ஆம் நாளிட்ட 2346—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் 25(2) பிரிவின் (தமிழ்நாடு சட்டம் எண் 13/1974) கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(72) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு சொந்தமான MSL 5005 உள்ள பணியாளர் வாகனத்திற்கு 17-3-1979 முதல் 30-6-1980 வரைக்கான காலத்திற்கு செலுத்தக்கூடிய அபராதத் தொகை ரூ. 534/– செலுத்தக் கூடியது தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 9-11-1983 ஆம் நாளிட்ட 2348 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் 25(2) பிரிவின் (தமிழ்நாடு சட்டம் எண் 13/1974) கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(73) கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான சில வாகனங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 14-11-1983 ஆம் நாளிட்ட 2391 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் 25(2) பிரிவின் (தமிழ்நாடு சட்டம் எண் 13/1974) கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(74) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதி நிலை அறிக்கையும், 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை துணை அறிக்கையும் [1948 ஆம் ஆண்டு மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(1) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(75) 1980–81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75(1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(76) 1982–83 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிடங்குகள் கழகத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு அறிக்கை (கழகத்தின் தணிக்கை அறிக்கையுடன் கூடியது) (ஆங்கிலம்) [1962 ஆம் ஆண்டு கிடங்குகள் கழகச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

(77) தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான ஆறாம் ஆண்டு அறிக்கையும் கணக்குகளும் (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(12) 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையாற்றும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை.

(13) 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் தேதி யன்று சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).